**செய்தி வெளியீடு எண்:106** **நாள் : 12.03.2015**

**பத்திரிக்கைச் செய்தி**

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் **மார்ச்** 2015 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 14.03.2015 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | ஸ்ரீ சாரதி வித்யாலயா மழலையர் மற்றும் தொடக்கபள்ளி, எண்.66, பிடாரியார் கோயில் தெரு. ஏழுகிணறு சென்னை–600 001 (கோழி மார்க்கெட் அருகில்) . |
| 2 | இராயபுரம் | சென்னை உருது மகளிர் தொடக்கப்பள்ளி, 71, அர்த்துாண் சாலை, இராயபுரம், சென்னை 13 (கல்மண்டபம் காவல் நிலையம் பின்புறம்) |
| 3 | பெரம்பூர் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, 12, கபிலர் தெரு, பெரம்பூர், சென்னை–11 (டான்பாஸ்கோ மேல்நிலைப்பள்ளி எதிரில்) |
| 4 | அண்ணாநகர் | ஜெயகோபால் கரோடியா அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சூளைமேடு நெடுஞ்சாலை, சூளைமேடு ,சென்னை 600 0094.<br>(பெருமாள் கோயில் எதிரில்) |
| 5 | அம்பத்தூர் | அரசினர் உயர்நிலைப்பள்ளி, கோலடி, சென்னை 600 077<br>(பெட்ரோல் பங்க் பின்புறம் ) |
| 6 | வில்லிவாக்கம் | குட்வில் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, எண்.55, 5–வது தெரு, SRB நகர், கொளத்துார், சென்னை 600 099.<br>(பாபாநகர் 12–வது தெரு, கொளத்துார் அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | சர்.ஏ. இராமசாமி முதலியார் சமுதாயகூடம், திருவொற்றியூர், சென்னை 600 019 ( திருவொற்றியூர் கண்ணாடி தொழிற்சாலை மற்றும் அசோக் லைலாண்ட் பணியாளர் குடியிருப்புக்கு அருகில்) |
| 8 | ஆவடி | ஆவடி நகராட்சி நடுநிலைப்பள்ளி, 48, சபி நகர், 3–வது தெரு விரிவு, முக்தா புதுப்பேட்டை, ஆவடி, சென்னை–600 055.<br>( பஸ் நிலையம் அருகில்) |
| 9 | தி.நகர் | சென்னை தொடக்கப்பள்ளி, எண் 18, ஈஸ்வரன் கோயில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை – 600 033. (மேட்லி சுரங்கப்பாதை அருகில்) |
| 10 | மயிலாப்பூர் | சென்னை உயர்நிலைப்பள்ளி,10 சிருங்கேரி மடம்சாலை, ஆர்.ஏ.புரம், சென்னை – 600 028. (மந்தவெளி ரயில்நிலையம் அருகில்) |
| 11 | பரங்கிமலை | நகராட்சி நடுநிலைப்பள்ளி, பெரிய தெரு, கீழ்க்கட்டளை, சென்னை – 600 117 (உழவர் சந்தை அருகில்) |
| 12 | தாம்பரம் | சமுதாய நலக்கூடம் வேங்கைவாசல் மெயின்ரோடு, வேங்கைவாசல் ஊராட்சி, சென்னை – 600 073.<br>(வேங்கைவாசல் பேருந்து நிலையம் அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | தாடண்டர் நகர் திறந்த வெளி மைதானம், தாடண்டர் நகர், சைதாப்பேட்டை, சென்னை – 600 015 (தாடண்டர் நகர் சமுதாய நலக்கூடம் அருகில்) |
| 14 | ஆயிரம்விளக்கு | செயிண்ட் பிரான்சிஸ் சேவியர் ,மெட்ரிக்குலேசன் பள்ளி, 153, டிடிகே ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018.<br>(அடையார் கேட் ஹோட்டல் அருகில்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை நடுநிலைப்பள்ளி, எண் 1, வி.ஆர்.பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–5,<br>(கஸ்தூரிபாய் மகளிர் தாய்சேய் மருத்துவமனை அருகில்) |
| 16 | சோழங்கநல்லூர் | ஆதிபராசக்தி கல்யாண மண்டபம் ,அண்ணா நெடுஞ்சாலை, கந்தன்சாவடி, சென்னை – 600 096 ( காளியம்மன் கோயில் அருகில்) |

முதன்மை செயலாளர்
/ஆணையாளருக்காக

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**